**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை - 2023**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையின் ‘‘சபை” மற்றும் அதன் துணை நிறுவனத்தின் ‘‘தொகுதி” 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து, சபையின் மற்றும் தொகுதியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின்தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு, சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது

கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ | 2024 ஏப்ரல் 01 திகதி அன்று 1981 ஆண்டு முதல் 2022 வரையிலான காலப்பகுதிக்குரியதாக 4,526 தொழல் தருனர் நிறுவனங்களால் சபையிற்கு செலவு வைக்கப்பட்ட மொத்தம் ரூபா 516.79 மில்லியனான பங்களிப்பு தொகை 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைபொறுப்பு நிதியசபை சட்டத்தின் 16 (3) பிரிவின் பிரகாரம் அந்த அந்த உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்கில் செலவு | 1981-2014 வரையான காலப் பகுதிக்குரியதாக பங்களிப்புச் செய்யப்படாத பங்களிப்பு தொகை மீதி ரூபா 13.773 மில்லியன் ஆனதுடன் அந்த தொகையில் ரூபா 10 மில்லியனிற்கு அதிக தொகை ஒரு தொழல் தருனர் நிறுவனத்திற்குரிய பங்களப்புச் செய்ய வேண்டிய தொகையாகும். மேலும் 2015-2022 வரை தொடர்ந்தும் பங்களிப்புச் செய்ய வேண்டிய மீதித் தொகை ரூபா 503.02 மில்லியன் ஆகும். தொழல் தருனர்களினால் பணம் வரவு வைக்கப்பட வேண்டிய | பங்களிப்பு தொகை செலவு வைக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களை சரியாவும் இனங்காணுதல், அங்கத்துவ தொகையை அறவிடம் புதியை முறைமையை மேம்படுத்துதல் மற்றும் இனங்காணப்படாத தொகையை விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உறுப்பினர் நிதியத்தின் மீதி மற்றும் தனிநபர் கணக்கு மீதி கூட்டத் தொகைக்கிடையில் இணக்கமின்மை வெளிப்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட மீதியினுள் உள்ளடங்கிய 09 மற்றும் 42 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்து நிலவிவரும் ரூபா 20 மில்லியன் மதீதியும் காண்பிக்கப்பட்டது. | உறுப்பினர்களின் விவரங்களை எமக்கு சமர்ப்பித்த பின்னர் குிறத்த உறுப்பினர்களின் கணக்கிற்கு பிரிப்பதே தற்போதைய முறையாகும். | இனங்காண்பதற்கு வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ | 1982 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக தொழல் தருனர்களை இனங்காண முடியாது 2023 திசெம்பர் 31 திகதிவரை V 999 தொங்கல் கணக்கில் நிலவிய ரூபா 6.52 மில்லியனான மீதிப் பெறுமதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு தெரியாது தொழில் தருனரினால் மேற்கொண்டிருந்த செலவு வைப்புக்களிற்கு உரியதாக இலக்கம் V 999 மற்றும் V 100 கொண்ட இரண்டு தொங்கல் கணக்குகளில் ரூபா 6.52 மில்லியனான மீதி 2023 திசெம்பர் 31 திகதி நிலவியது. அத் தொகையிலிருந்து 1982 முதல் 2006 வரையான காலத்தில் தொழில் தருனர்களினால் மேற்கொண்டுள்ள கொடுப்பனவுகளின் மீதியை மாற்ற முடியாதவாறு கணனி தொகுதியில் (AS 400) தடை போடப்பட்டுள்ளமை. சரியான தொழில் தருனர்களை கண்டறிந்த பின்னர் இந்த தொகை சரியான தொழில் தருனர் கணக்குகளில் கணக்கீடு செய்யப்படும். | மீதிகளை இனங்கண்டு அங்கத்தவர் கணக்குகளில் செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டு கம்பனிகளில் செய்யப்பட்ட முதலீடுகளிற்காக பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படும் பெறவேண்டியவ வட்டி வருமானம் ரூபா 24.967 மில்லியன் மற்றும் அதற்கான ஏற்பாடுகளை செம்மையாக்குதல் குறித்து இலங்கை கணக்கீட்டு நியமம் 37 பிரகாரம் வெளிப்படுத்தலை நிதிக்கூற்றுக்களின் ஊடாக காண்பித்திருக்கவில்லை. | முதலீட்டிற்காக பெறவேண்டிய வட்டி வருமானமான ரூபா 24.97 மில்லியனிற்கான ஏற்பாட்டு ஒதுக்கீடு சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் 37 பிரகாரம்க கணக்கீட்டு குறிப்பொன்றின் ஊடாக காண்பிக்க எதிர்காலத்தில் நடவக்கை எடுப்பதென. | கணக்கீட்டு குறிப்பின் ஊடாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபையினால் 1994 ஆம் ஆண்டில் 14.48 சதவீத நிலையான வட்டி விகிதத்தின் கீழ் பெருந்தோட்ட கம்பனியொன்றில் செய்த ரூபா | 2011, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கம்பனியுடன் இணங்கிய பின்னர் மீள் செலுத்தும் திட்டத்தின் (Repayment Plan) பிரகாரம் தீர்க்கப்பட்ட தொகை | பெறவேண்டிய மீதியை சரியாக இணக்கி கணக்குகளில் வெளிப்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | 15 மில்லியனான கடன்பத்திர முதலீட்டிற்காக 2023 திசெம்பர் 31 திகதி வரை அறவிட வேண்டிய நிலுவை வட்டி தொகை ரூபா 26.3 மில்லியனான போதும் மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய மீதி ரூபா 9.39 மிலிலியன் எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறைக்கப்பட் பின்னர் எஞ்சிய வட்டியாக ரூபா 9.39 மில்லியன் கணக்குகளில் 2023.12.31 திகதியளவில அறவிட வேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. முதலீட்டு மூலதனத்தின் இறுதி தவணையை செலுத்திய பின்னர் 2010 ஆண்டு வரை அறவிட வேண்டிய எஞ்சிய மீதி ரூபா 26.3 மில்லியன் என முதலீட்டு பிரிவு கணக்கின் பிரகாரம் அறிக்கை செய்யப்படுகிறது.<br>இதுவரை கணக்கீடு செய்துள்ள தொகையை விட அதிகமாக ஏதேனும் தொகை கிடைக்கப் பெற்றால் அதனையும் உரியவாறு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ | 2022 மார்ச் 15 திகதிய கடிதத்தின் மூலம் நிதியமைச்சினால் சபைக்கு வழங்கிய கிரயம் ரூபா 6.8 மில்லியன் ஆன மோட்டார் வாகனத்தை சபையின் பணிகளிற்கு பயன்படுத்தியிருந்த போதும் சொத்து மதிப்பீடு செய்து 2023 ஆகஸ்ட் மாதத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சொத்தை பயன்படுத்திய 17 மாத காலத்திற்கு பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதியமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்ட மோடார் வண்டியின் கிரயம் ரூபா 6.8 மில்லியன் ஆகும். ஒப்படைக்கப்பட்ட திகதியன்று மோடார் வண்டியின் பெறுமதியை கணக்குகளிற்கு உட்படுத்த மதிப்பீட்டுப் பெறுமதியொன்று இல்லாததுடன், அந்த வாகனத்தை காப்புறுதி செய்கையில் பெற்றுக் கொள்ளப்பபட்ட மதிப்பீட்டு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு 2023 ஆகஸ்ட் மாதத்தில் இந்த சொத்து கணக்கீடு செய்யப்பட்டது. வானத்திற்கு மதிப்பீட்டுப் பெறுமதி இல்லாததால் கணக்குகளிற்கு எடுக்க முன்னர் பயன்படுத்திய காலத்திற்காக இந்த சொத்திற்காக பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்ய முடியாதென. | கிரயம்/ மதிப்பீட்டு பெறுமதியின் மீது சரியாக பெறுமானத் தேய்வு கணக்கிட்டு கணக்குகளில் பதிவிட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான நவம் மாவத்தையில் அமைந்துள்ள காணியில் நடாத்திச் செல்லும் வாகன தரிப்பிடத்தில் வாகன தரிப்பிட வசதிகளை பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அந்த வாடிக்கையாளர்களிடம் இருந்து 2023 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டியிருந்த ரூபா 8.096 மில்லியனிலிருந்து 2024 ஜுலை 09 திகிதியளவில் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 3.73 மில்லியனாகும். இதில் 2017 முதல் 2022 வரையான ஆண்டுகளிற்குரிய தொகை ரூபா 1.04 மில்லியனாகும். 2016 ஆம் ஆண்டிற்கும் 2023 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 912,514 நிலுவைத் தொகைகள் காணப்படும் 15 வாடிக்கையாளர்களிடமிருந்து பாதுகாப்பு வைப்புத் தொகையை அறவிடவும் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 38 வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2.4 மில்லியன் வாடகை தொகை இருந்ததுடன் அது பெற்றுக் கொண்ட பாதுகாப்ப வைப்புத் தொகையை விஞ்சியிருந்தது. | எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களுடன் செல்லுபடியாகும் உடன்படிக்கையை செய்து நடைமுறை பயன்பாட்டிற்கு கொண்டுவர எதிர்பார்க்கப்படுகிறது. 2023 திசெம்பர் 31 வரை 2015 முதல் அறிவிட வேண்டிய தொகை ரூபா 3.73 மில்லியன் ஆவதுடன் இவற்றுள் 2017 முதல் 2023 ஆண்குகளிற்குரிய அறவிட வேண்டிய தொகை ரூபா 1.01 மில்லியனாகும். 2017 சனவரி 01 திகதிக்கு முதல் வாகன தரிப்பிடத்தில் பதிவு செய்த வாடிக்கையாளர்களுக்கு உரிய வைப்புத் தொகையை வைப்புச் செய்யுமாறு எழுத்து மூலம் மற்றும் வாய்மொழி மூலம் தெரிவிக்கப்பட்ட போதும் அதற்காக இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. புதிதாக வாகனங்களை நிறுத்த விண்ணப்பிக்கும் போது பாதுகாப்பு வைப்புத் தொகையை குறித்த வாகனங்களின் அளவிற்கு ஏற்ப வைப்புச் செய்வதனை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய தொகையை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதி வரை சபையினால் 1994 ஆண்டில் 14.48 சதவீத நிலையான வட்டி விகிதத்தின் கீழ் பெருந்தோட்டக் கம்பனியொன்றில் செய்யப்பட்ட ரூபா 15 மில்லியன் கடன் பத்திரிகை முதலீட்டிற்காக அறவிட வேண்டிய நிலுவைத் வட்டித் தொகை ரூபா 26.29 மில்லியன் ஆகும். இது சம்பந்தமாக 2023 மார்ச் 27 திகதி குறித்த நிறுவனங்கள் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் தலையீட்டுடன் செய்யப்பட்ட | 2023 மார்ச் 27 திகதி கம்பனியுடன் நடத்திய கலந்துரையாடலில் கம்பனியின் தற்போதைய நிதி நிலைமையின் பிரகாரம் இந்த வட்டியைத் தீர்ப்பதற்காக சிறுது காலம் செல்லுமெனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சுடன் கலந்துரையாடி திட்டம் முன்வைக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்ட போதும் இதுவரை முன்வைக்கவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் மீண்டும் பொது முயற்சிகள் | நிலுவையில் உள்ள வட்டி வருவாயை வசூலிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கலைத்துரையாடலின் பிரகாரம் நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு விதித்திருந்த பொதும் 2024 ஆண்டு ஜுன் மாதம் கணக்காய்வு சந்தர்ப்பம் வரை இந்த தொகையை சபையிற்கு அறவிட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் தலையீட்டுடன் அத் தொகையை அறவிட்டுக் கொள்ள காணப்படும் இயலுமை பற்றி கண்டறிந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென. | |
| (இ) | 2002 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைவதன் கீழ் கம்பனியொன்றில் உறுதிமொழித் பத்திரங்களில் முதலீடு செய்திருந்த ரூபா 12.17 மில்லியனிற்காக மற்றும் 2007 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைவதன் கீழ் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 7.45 மில்லியனிற்காக அறவிட வேண்டிய வட்டித் தொகை முறையே ரூபா 15.21 மில்லியன் மற்றும் ரூபா 0.37 மில்லியன் ஆகும். இந்த நிறுவனத்தை கலைப்பதற்கான உத்தரவைப் 2008 ஒக்டோபர் 03 திகதி மாவட்ட நீதிமன்றம் வழங்கியிருந்த போதும 2024 மே 04 திகதி வரை இப் பணத்தை அறவிடுவது தொடர்பாக திட்டவட்டமான உறுதிப்படுத்தல் ஒன்று சபைக்கு இருக்கல்லை. இதன் காரணமாக அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய நலன்கள் குறைந்திருந்தன. | இந்த கம்பனியை கலைக்க 2008 ஆம் ஆண்டு நீதிமன்றத்தினால் உத்தரவு வழங்கியிருந்த போதும் நிலையில், இதுவரை கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. பிற்காலத்தில் இந்த கம்பனியின் கடன்படுனர் தரப்பினர்களால் நீதிமன்ற உத்தரவின் மீது ரூபா 42.6 மில்லியன் தொகையை கலைக்கும் வழக்கின் செலவிற்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த தொகையிலிருந்து தொழல் தருனர்களின் பொறுப்பு நிதியத்திற்கு உரிமை இருப்பின் அந்த தொகையை அறவிட முடியுமான சாத்தியக்கூறுகள் குறித்து 2024 மார்ச் 12 திகதிய நீதிபதியின் அறிவுரை கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது | பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அறவிட வேண்டிய நிலுவை வட்டி வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதிவரை உரிமை கோரப்படாத சாதாரண நலன் கணக்குகளில் காணப்படும் 20 ஆண்டுகளை விஞ்சிய நிலுவைகளின் கூட்டுத் தொகை ரூபா 3.83 மில்லியனானதுடன் குறித்த அங்கத்தவர்களை இனங்கண்டு இந்த தொகையை தீர்க்க இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2001 இற்கும் 2022 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகள் ரூபா 3.83 மில்லியனாகும். பல்வேறு முறைமைகள் மூலம் தகவலகளை பெற்று இந்த நலன் தொகைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நலனாளர்களை இனங்காண முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்து பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உரிமை கோரப்படாத இறப்பு நலன்களாக 1,253 நலனாளிகளுக்கு ரூபா 23.37 | இறந்த அங்கத்தவர்களுக்கு உரித்தான அங்கத்துவ நலன்களை பெயர் குறித்தவர்களுக்கு மற்றும் | உரிமை கோரப்படாத இறப்பு நலனானர்களை இனங்கண்டு அந்த |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் செலுத்த வேண்டி இருந்ததுடன் 2024 மார்ச் 31 இல் 1,240 நலனாளிகளுக்குரிய அந்த மீதி ரூபா 23.043 மில்லியனாகும். இந்த மீதியில் 07 மற்றும் 28 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய 826 நலனாளர்களுக்கு செலுத்த வேண்டிய இறப்பு நலன்கள் தொகை ரூபா 9.9 மில்லியன் ஆகும். தொடர்நதும் நிலவிவரும் இந்த மீதியை தீர்க்க இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | அவர்களின் சட்டப்பூர்வ உரிமையாளர்களுக்கு செலுத்துகையில் அதற்கு முன்வரும் உரிமையாளர்களுக்கு அவர்களின் பங்கு வழங்கப்படுகிறது. அனைத்து பெயர் குறித்தவர்கள் மற்றும் வாரிசுகள் இனங்காணப்பட்டதன் பின்னர் நலன்கனை செலுத்த நடவடிக்கை எடுத்தால் கொடுப்பனவை தாமதிக்க மற்றும் செலுத்தப்படும் தொகையை குறைக்கவும் நேரிடும். | தொகையை விடுவிக்க முறைமை ஒன்றை செயற்படுத்த வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் புலமைப்பரிசில் சித்தியடைந்த 9,276 மாணவர்களுக்கு செலுத்துவதற்கு ரூபா 139.14 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இவற்றுள் 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளிற்குரிய முறையே 16, 260 மற்றும் 9,000 மாணவர்களுக்குச் செலுத்தப்படாத தொகைகள் காணப்பட்டன. | விண்ணப்பங்கள் நன்மைகளை வழங்குவதற்கான பிரமாணங்களுக்கு இணங்காததன் மீது மற்றும் அங்கத்தவர்களினால் சமர்ப்பிக்கும் பூரணமற்ற விண்ணப்பங்களுகான தகவல்களை மீண்டும் பெற்றுக் கொண்டு அதற்காக கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | பூரணமற்ற தகவல்களை விரைவில் பெற்றுக் கொள்ள முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்து உதவித் தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 11 ஆம் பந்தி<br>. | 2022 ஆம் ஆண்டிற்கான பண்டக கணிப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல் 2023 ஏப்ரல் 30 திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய போதும் 2022 வருடாந்த பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் உள்ளடங்கப்பட்ட 100 பற்றாக்குறை அலகுகள் மற்றும் 60 மிகை அலகுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பண்டக கணிப்பீட்டின் போது வெளிப்படுத்தப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பான உள்ளக கணக்காய்வு பிரிவின் அவதானிப்புகளுடன் கணக்காய்வு குழுவின் கலந்துரையாடளிற்கு உட்படுத்தப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டிற்காக நடத்தப்பட்ட வருடாந்த பண்டக கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்படும் விடயங்களையும் கவனத்திற் கொண்டு இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தொகுதியின் நிதி விளைவுகள் ரூபா 57,133 மில்லியன் மற்றும் சபையின் நிதி விளைவுகள் ரூபா 55,942 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தொகுதியின் மற்றும் சபையின் இலாபம் முறையே ரூபா 37,680 மில்லியன் மற்றும் ரூபா 36,978 மில்லியன் ஆகும். அதற்கிணங்க தொகுதியின் மற்றும் சபையின் நிதி விளைவுகள் முறையே ரூபா 19,453 மில்லியனாலும் ரூபா 18,964 மில்லியனாலும் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது சபையின் வட்டி வருமானம் 18,064 மில்லியனால் அதிகரித்தமை மேற்கூறிய நிதி விளைவுகளின் வளர்ச்சிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வாடகைக்கு பெற்றுக் கொண்ட சுமார் 05 கட்டிடங்களின் செயல்பாடுகளை நடாத்திச் செலவதனால் சபையின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வருகைதரும் தொழில்தருனர்கள் மற்றும் ஊழியர்கள் இரு தரப்பினர்களிற்கும் சிரமங்களை ஏற்படுத்துவதால் ஊழியர் சேம நிதியுடன் ஒரே இடத்தில் சேவைகளை வழங்குவதற்கான வசதிகளை கருத்தில் கொண்டு 2020 செப்டம்பர் மாதம் முதல் மெஹெவர பியச கட்டிடத்தில் 5 மாடிகளில் சபையின் அலுவலகங்கள் நிறுவப்பட்டு அதற்கான மாதாந்த வாடகை தொகையாக ரூபா 10.3 மில்லியன் செலுத்தப்படுகிறது. மேற்குறித்த நோக்கில் பாரிய செலவொன்றை மேற்கொண்டு ஒரே இடத்தில் நிறுவிய போதும் சபையின் கட்டுபெத்த மற்றும் மஹரகம பிராந்திய அலுவலகங்கள் 2021 திசெம்பர் முதல் 2023 நவம்பர் வரை 3 வருட காலத்திற்கு மீண்டும் கட்டுபெத்த மற்றும் மஹரகம பிரதேசங்களில் வாடகை கட்டிடங்களில் நிறுவப்பட்டு மாதாந்தம் முறையே ரூபா 120,000 மற்றும் ரூபா 100,000 வீதம் வாடகை செலுத்தி நடத்திச்செல்ல முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும், கட்டுபெத்த அலுவலகம் 2023 ஒக்தொபர் 30 ஆம் திகதி மற்றும் மஹரகம அலுவலகம் 2023 ஏப்ரல் முதல் அந்த வாடகை கட்டிடங்களிலிருந்து அகற்றப்பட்டு | 2020 ஆம் ஆண்டு ஆரம்பித்த கொரோனா தொற்றுநோயின் இரண்டாம் கட்டம் 2021 ஆம் ஆண்டு மீண்டும் தலைதூக்கியதுடன் அதிகளவான மக்கள் பிரதான அலுவலகத்திற்கு வருவது பொருத்தமற்றதாகையால் அதற்கு மாற்று வழியாக கட்டுபெத்த பிரதேசத்திலில் மற்றும் மஹரகம பிரதேசத்தில் கட்டிடங்கள் 2021 திசெம்பர் 01 திகதியிலிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டன. அபாய நிலைமை முடிவடைந்தவுடன் அந்த பொது மக்கள் சேவைகளை பிரதான அலுவலகத்தில் நடாத்திச்செல்ல கிடைத்த பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட இரண்டு கட்டிடங்களின் கொடுப்பனவு நடவடிக்கைகள் தீர்க்கப்பட்டு உரிமையாளர்களுக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. | சபைக்கு நிதி ரீதியான நட்டங்கள் ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டும் மெஹெவர பியச கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டதால் கட்டுபெத்த அலுவலகத்திற்கு ரூபா 2.04 மில்லியன் மற்றும் மஹரகம அலுவலகத்திற்கு ரூபா 1.7 மில்லியனையும் சபை மேலதிகமாக செலுத்தியிருந்தது. | | |
| (ஆ) | பிராந்திய அலுவலகங்களை நடத்திச் செல்வதற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட 04 கட்டிடங்களின் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருந்த போதும் தேவைப்பாட்டின் பிரகாரம் உடன்படிக்கை பதிவு செய்தல் 2024 மார்ச் மாதம் வரை மேற்கொள்ளப்படாததால் உடன்படிக்கை இல்லாது நடாத்திச் செல்லும் காலத்திற்காக செலுத்திய வாடகை ரூபா 5.26 மில்லியன் ஆகும். நாரஹேன்பிட்டி விஷேட பொருளாதார மையத்தில் வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லும் சபையின் ஆவணக் காப்பகத்திற்காக 2022 ஏப்ரல் முதல் 2023 திசெம்பர் வரை முறையான குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திட சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அக் காலப் பகுதிக்குரியதாக செலுத்த வேண்டிய நிலுவை வாடகை தொகை ரூபா 4.06 மில்லியன் ஆனது. | பிராந்திய அலுவலகங்களை நடாத்திச் செல்ல குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட, காலி பிராந்திய அலுவலகத்தின் குத்தகை உடன்படிக்கை 2024 மே 21 இல் கையொப்பமிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய மூன்று அலுவலகங்களின் குத்தகை உடன்படிக்கைகள் தற்போது பதிவுக்காகப் அனுப்பியுள்ளன. நாரஹேன்பிட்டி விசேட பொருளாதார மைய முகாமைத்துவ பொறுப்பு 2022 ஏப்ரல் மாதம் முதல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் சுவீகரிக்கப்பட்டதுடன் குத்தகை ஒப்பந்தங்களை தயாரிப்பதும் அந் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும். எங்களால் 2023 ஏப்ரல் 10 திகதி, 2024 சனவரி 02, 2024 பெப்ரவரி 12 திகதிகளில் இது தொடர்பாக வினவல் கடிதங்களை அனுப்பி குறித்த குத்தகை உடன்படிக்கைகளை தயாரித்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் உடன்படிக்கைகளை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் ஆளணியனிரிற்கான மருத்துவ நிவாரண முறையின் கீழ் பட்டியல்கள் மீள்நிரப்புதலின் போது ஒரு அங்கத்தவரிடமிருந்து இந்த உத்தேச திட்டத்திற்காக அறவிடும் தொகை ரூபா 30 இலிருந்து ரூபா 150 வரை அதிகரிக்ககப்பட்டிருந்த போதும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மருத்துவ மீள்நிரப்பு தொகையிலிருந்து 97 மற்றும் 95 சதவீத பங்களிப்பொன்றை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் சபையின் பங்களிப்பு ரூபா 128.55 மில்லியன் ஆனதுடன், அங்கத்தவர் பங்களிப்பு ரூபா 6.77 மில்லியனானது. 2023 ஆகஸ்ட் 15 திகதி வெளியிடப்பட்ட நிருவாக மற்றும் மனிதவளப் பிரிவு | மருத்துவக் கட்டணம், மருந்து மற்றும் உபகரணச் செலவுகள் அசாதாரணமாக அதிகரித்ததன் மீது அதிகபட்ச தொகை ரூபா 60,000 ஆன பொது மருத்துவ செலவுகளின் கீழ் மீள்நிரப்ப போதாதன் மீது, விசேட உபகரணங்கள் மற்றும் சரிசெய்தல் உபகரண செலவுகள், வைத்தியசாலை அனுமதி செலவுகளின் கீழ் மீள்நிரப்ப அங்கீகாரம் வழங்கப்பட்டன.<br><br>அனைத்து மருத்துவ பட்டியல் மீள்நிரப்பு செலவுகள் முன்கூட்டியே கணக்காய்விற்கு உட்படுத்துதலும் ரூபா 20,000/- இனை விஞ்சிய பட்டியல்கள் | முடிவெடுக்கும் போது சிறந்த ஆய்வொன்றுடன் மற்றும் கவனத்துடன் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கை கடித இலக்கம் 2013/14 மூலம் பொது செலவின மீள்நிரப்பு முறைமையின் கீழ் காணப்பட்ட விஷேட உபகரண மற்றும் சரிசெய்யும் உபகரண செலவினம் வைத்தியசாலை செலவினத்தின் கீழ் மீள்நிரப்ப அங்கீகாரம் வழங்கும் போது உயரந்த பட்சத்தை விதிக்க நடவடிக்கை எடுக்காததால் 2023 செப்டம்பர் முதல் அவ் உபகரணங்களிற்காக உச்ச பெறுமதியுடன் கூடிய பட்டியல்களை மீள்நிரப்பும் சந்தர்ப்பம் வழங்குவதற்கு நேர்ந்திருந்தது. | முன்கூட்டிய கணக்காய்வின் பின்னர் மருத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படும்.<br><br>மூக்குக் கண்ணாடிகளுக்கு ரூபா 50,000/- ஆன அதிகபட்சத்தின் கீழாக ஒரு நபருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாத்திரம் செலவினங்களைத் மீள்நிரப்ப முடியுமாவதுடன், ரூபா 50,000/- விஞ்சிய பல் மருத்துவ சிகிச்சைகளிற்காக செலவுகளை மேற்கொள்ள முன்னர் மருத்துவக் குழுவின் முன்கூட்டிய அனுமதியைப் பெற வேண்டும்.<br><br>அதிக பெறுமதியுடன்கூடிய போலியான மருத்துவ பட்டியல்களை சமர்ப்பித்த தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நியதிச் சட்டத்தின் பிரகாரம் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி சபையின் தலைவரான போதும், நிதி அலுவல்கள் தொடர்பான நிறுவனமொன்றாக சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி அதன் தவிசாளர் ஆக வேண்டுமென தனைக்கான தொழில் தருனர் பொறுப்பு நிதிய சபை சட்டத்தின் 5 (2) பிரிவினை திருத்தியமைக்க வேண்டுமென 2016 ஆகஸ்ட் 26 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான செயற்குழு கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் 2023 ஆண்டு இறுதி வரை அந்த நடவடிக்கைகள் முடிவிக்கப்படவில்லை. | பல சந்தர்ப்பங்களில் சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் தொடர்பாக முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தற்போது சட்ட நகழ் திணைக்களத்தினால் தொழில் தருனர் பொறுப்பு நிதிய சபைச் சட்டத்தின் திருத்தத்திற்காக வரைவு செய்யப்பட்டுள்ள ஆரம்ப வரைவில் மேற்குறித்த 5(2) பிரிவிற்காக உத்தேச திருத்தங்களை உட்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயுமாறு அறிவித்துள்ளது. இது தொடர்பாக குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் முன்னேற்றம் தொடர்பாக சபையினால் தொடர்ந்து பின்னூட்டல் மேற்கொள்ளப்படுகிறது. | பொது முயற்சிகள் மீதான செயற்குழுவினால் வழங்கிய உத்தரவுகளை செயற்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 11 பட்டியலபடுத்தப்பட்ட கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் சராசரிக் கிரயம் ரூபா 641 | 2015 மற்றும் 2019 ஆண்டிலிருந்து பங்கிலாகம் கிடைக்காத இரண்டு கம்பனிகளும் சுற்றுலா | அங்கத்தவர்களிற்கு உயர்ந்த நலன்களை பெற்றுக் கொடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனான பங்குகளிற்குரிய 2023 ஆண்டின் பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. 2015 ஆண்டு மற்றும் 2019 ஆண்டுகளிலிருந்து 2023 ஆண்டுவரை தொடர்ச்சியாக பங்கிலாபம் கிடைத்திருக்காத ஒரு கம்பனி வீதமும் 2020 மற்றம் 2021 ஆண்டுகளிலிருந்து 2023 வரை பங்கிலாபம் கிடைக்காத கம்பனிகள் இரண்டு வீதமும் அவற்றில் காணப்பபட்டன. | ஹோட்டல் துறையைச் சேர்ந்த இரண்டு கம்பனிகள் ஆவதுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து மீண்டும் சுற்றுலா வியாபாரத் துறையில் வளர்ச்சியை காண்பிப்பதால் மற்றும் தற்போது இக் கம்பனிகளின் பங்குச் சந்தை விலைகளும் உயர்ந்த பெறுமானத்தை எட்டியுள்ளதாலும் 2024 ஆண்டில் இந்த கம்பனிகளின் பங்கிலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கம்பனிகளின் பங்குச் சந்தை விலை உண்மையான கிரயத்தை விட உயர் பெறுமானத்தை எட்டும் போது மூலதனத்தை இலாபத்துடன் விற்று மூலதன இலாபத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இயலுமானவாறு முதலீட்டை முகாமை செய்ய வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் 4,705,833 அலகுகளின் கிரயம் ரூபா 142.6 மில்லியனான அலகுப் பொறுப்பு நிதியத்தில் முதலீட்டிற்காக 2023 ஆம் ஆண்டில் பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை. அந்த அலகுப் பொறுப்பிற்கிடையில் National Equity Found இல் மேற்கொண்ட முதலீட்டிற்காக 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையும் பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக அந்த பங்கிலாப வருமானத்தை அங்கத்தவர்களிற்கு கிடைத்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சாதகமான சந்தை நிலைமையின் கீழ் அலகுப் பொறுப்புக்களை விற்பனை செய்து மூலதன இலாபமாக ரூபா 11.96 மில்லியன் ஈட்டப்பட்டிருந்தது. அவ்வாறே National Equity Found அலகுப் பொறுப்பு சந்தை விலைகள் 2020 திசெம்பர் 31 முதல் தொடர்ச்சியாக உயர் பெறுமானத்தை காட்டியுள்ளதுடன் எதிர்காலத்தில் மூலதன இலாபத்துடன் விற்பனை செய்ய மற்றும் பங்கிலாபத்தையும் அறிவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுவதென. | அங்கத்தவர்களிற்கு உயர்ந்த நலன்களை பெற்றுக் கொடுக்க இயலுமானவாறு முதலீட்டை முகாமை செய்ய வேண்டும். |
| (இ) | சபையின் முதலீட்டுக் கொள்கை பிரகடனத்தின் 4 ஆம் அத்தியாயத்தில் குறிப்பட்டுள்ள பிரகாரம் சபையின் மேலதிக நிதியை அரச காப்புப் பத்திரங்களில் 87 சதவீதம் முதலீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் 2023 திசெம்பர் 31 திகதியன்று முதலீட்டு கலவை பரீட்சிப்பின் போது அந்த முதலீடு 92 சதவீதமாக இருந்தது | தேசிய அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும் மிகவும் பாதுகாப்பான, நிரந்தர, வட்டி வருமானத்துடன் கூடிய திறைசேரி பிணைமுறிகளில் முதலீடுகளின் மீது இந்த சதவீதம் மாறியுள்ளது. இதனூடாக அங்கத்தவர் நிதியம் மிகவும் பாதுகாப்பானதாக உள்ளதுடன் நட்டம் ஏற்படவில்லை. | முதலீட்டுக் கொள்கை பிரகடனத்தின் குறிப்பட்டுள்ள பிரகாரம் முதலீட்டு கையாளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட தொழில் தருனர் எண்ணிக்கையான 189,850 இல் 66 சதவீதம் அல்லது 125,850 பேர் செயலற்ற தொழல் தருனர்களாக இருந்தனர். சபையினால் பதிவு செய்யப்பட்ட தொழல் தருனர் நிறுவனங்களை இற்றைப்படுத்துவதற்கு் எடுக்கப்படும் நடவடிக்கைகள் போதியதாக இல்லையென அவதானிக்கப்பட்டது. | 2019 முதல் 2022 வரை நிலவிய Covid தொற்று நிலைமை, பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த காலப் பகுதியில் சில தொழல் தருனர் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததுடன், கள பரீட்சிப்பு மூலம் தொழில் தருனர் நிறுவன பரீட்சிப்பையும் நடாத்த முடியாதிருந்தது. 2022 ஜூலை மாதம் முதல் கள பரீட்சிப்புக்களை மீண்டும் ஆரம்பித்து செயலற்ற தொழில் தருன்ர் நிறுவனங்களை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. | செயலற்ற தொழல் தருனர் நிறுவனங்களை இனங்கண்டு செயல்படுத்தும் முறைமையொன்றை மேம்படுத்த வேண்டும். |
| (உ) | சுயதொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சபையில் பதிவு செய்வதனை அதிகரித்துக் கொள்ள தனிப் பிரிவுவொன்று சபையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள போதும், 2023 ஆம் ஆண்டில் பிரதான அலுவலகம் மற்றும் 13 பிராந்திய அலுவலகங்களினால் ஆட்சேர்த்திருந்த அங்கத்தவர் எண்ணிக்கை சுமார் 456 பேர்கள் ஆகும் அவ்வாறே Labour Force Survey - Annual - 2019 இன் பிரகாரம் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மொத்த சுயதொழிலாளர்களின் எண்ணிக்கை 3,233,290 ஆன போதும் நிதியத்தில் பதிவுசெய்துள்ள சுயதொழிலாளர்களின் எண்ணிக்கை 42,753 ஆனதில் சபையின் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை. | கடந்த காலங்களில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமை காரணமாக சுயதொழில் ஊக்குவிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது போனதுடன், தற்போது பதவி மேம்படுத்தல் நடவடிக்கைகள் மீள திட்டமிடப்பட்டு வருகின்றன. | சுயதொழிலாளர்களை பதிவு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்றை உருவாக்கி செயல்படுத்த வேண்டும். |
| (ஊ) | 2023 ஆண்டில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக பதிவு செய்த எண்ணிக்கை 14 ஆனதுடன் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அது முறையே 04, 19 மற்றும் 16 ஆகவும் இருந்தது. அவ்வாறே 2024 மார்ச் 02 திகதி அளவிலும் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் சபையில் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்ந்த அங்ககத்தவர்கள் தொடர்பான தரவுகள் கணனிமயமாக்கப்பட்டு இருக்கவில்லை. | புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக கருத்திட்ட அறிக்கையொன்றை வரைவு செய்துவருவதுடன் அது அங்கீகரிக்கப்பட்டவுடனே செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது தரவுகளை கணனிமயமாக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது. | ஆட்சேர்ப்பை மேம்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டியதுடன் தரவு கணனிமயமாக்கல் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | சபையினால் செயற்படு தொழில் தருனர்களிற்கு 2015 ஆண்டிற்கும் 2022 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்கிய நலன்புரி நலன்கள் தொடர்பாக புள்ளிவிவரத் தரவுகளின் பிரகாரம் மொத்த செயற்படு அங்கத்துவத்தின் 0.41 சதவீதம் முதல் 0.68 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவு மாத்திரம் இந்த நலன்களைப் பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டது. இந்த நலன்கள் தொடர்பாக சபையின அங்கத்தவர்களை அறிவுருத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் நலன்களை பெற்றுக் கொண்ட அங்கத்தவர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்படாததுடன், அங்கத்தவர் விழிப்புணர்வு மேலும் மேம்படுத்தப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சபை இது தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.<br>• சேவைப் பிரதேசங்களை உள்ளடக்கியதாக பிராந்தி அலுவலக மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்சித்திட்டங்களை 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் நடாத்துதல்.<br>• வருடாந்த நிதிக்கூற்று / கையேடு மூலம் அறிவுருத்துதல்<br>• அலுவலர் பயிற்சி ‘‘வெற்றிவோம் இலங்கை” நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் விழிப்புணர்த்துதல் | நலன்களை செலுத்துவது தொடர்பாக அங்கத்தவர்களை அறிவுருத்துவதற்காக எடுக்கப்படும் செயன்முறைகளை மேலும் மேம்படுத்த வேண்டும். |
| (ஏ) | தொழில்தருனர் மற்றும் அங்கத்தவர் கணக்குகள், அங்கத்தவர் நிதியத்தை மிகவும் சரியாக மற்றும் நம்பகத்துயுடன் பேணிச் செல்லல், அங்கத்தவர் மற்றம் தொழில்தருனர்களிற்காக நிகழ்நிலை தொலை தொடர்பு முறையூடாக தொகுதியுடன் தொடர்பு கொள்ளச் செய்யும் நோக்கில் நிதி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழிநுட்ப முகவர் நிறுவனம் மற்றம் சபைக்கிடையே 2016 இல் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருந்தது. கருத்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பம் முதல் இது வரை சபையினால் வன்பொருள் கொள்வனவு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 183.28 மில்லியன் செலவிட்டுள்ள போதும் தற்போது தொகுதியை நேரடி செயல்பாட்டு செயல்முறை ஒன்றாக மாற்றிக் கொள்ள முடியாதிருந்தது. | 2023 ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் செயல்பாட்டு ஏற்பு அமர்வுகளை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த போதும், பல்வேறு குறைபாடுகள் காரணமாக உரிய திகதியில் ஆரம்பிக்க முடியவில்லை. எதிர்காலத்தில் தொகுதியின் செயற்பாடுகளை ஏற்பு பரீட்சிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் தொகுதியை நேரடி செயல்பாட்டு செயல்முறையாக மாற்றமடையும் போது இந்த தொகுதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் அனைத்து நோக்கங்களும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு அனைத்து அங்கத்தவர்களிற்கும் அதன் விளைவுகளை அடைந்து கொள்ள முடியுமாகும். | தொகுதியை நேரடி செயல்பாட்டு செயல்முறையாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | ஊழியர் சேம நிதியத்தின் அங்கத்துவத்தை பெற்றுக் கொள்ளாது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையில் மாத்திரம் பதிவு செய்யும் தொழில்தருனர்களிற்காக சபையினால் AX முதல் XX வரை தற்காலிக கணக்குகள் (Dummy Accounts) பராமரிக்கப்படுவதுடன், 2023 திசெம்பர் 31 திகதியளவில் அவ்வாறான 28,994 தொழில்தருனர்களினால் அனுப்பப்பட்ட பங்களிப்பின் கூட்டுத் தொகை ரூபா 309.97 மில்லியன் ஆகும். இவற்றுள் 8 ஆண்டுகளிற்கும் 41 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்திற்குரிய மொத்த மீதி ரூபா 209.95 மில்லியனாகும். இந்த தற்காலிக கணக்குகளில் (Dummy Accounts) உள்ள பங்களிப்புகளை சரியான தொழில்தருனர் கணக்குகளில் செலவு வைப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றை இதவரை அறிமுகப்படுத்தி இருக்கவில்லை. | ஊழியர் சேம நிதியத்தில் பதிவு செய்யாத நிறுவனங்களை பரீட்சித்த பின்னர் அந்த நிறுவனங்களின் நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்காக 2015 ஆண்டிற்கு முன்னர் XX மற்றும் ZZ விநியோகம் செய்யப்பட்டதுடன் 2015 இன் பின்னர் AX- WX இலக்கம் விநியோகிக்கப்படுகிறது. அந்த நிறுவனங்களை ஊ.சே.நி. கீழ் பதிவு செய்யும் வரை அறவிடப்பட்ட தொகை மற்றும் அங்கத்தவர் நலன்கள் செலுத்துதலும் அந்த இலக்கத்தின் கீழ் செய்யப்படும். அந்த நிதியத்திற்குரிய ஊ.சே.நி. இலக்கத்தை இனங்காணுதல் தொடர்ச்சியாக இடம்பெறுவதுடன் அதற்காக பிராந்திய அலுவல மட்டத்தில் மற்றும் உரிய தொழிலாளர் அலுவலகத்தின் மூலம் தகவல்களை பெற்று தேவையான செயற்பாடுகள் எடுக்கப்படுகிறது. | தகவல்களை பெற்று சரியான தொழில்தருனர் கணக்கில் செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | அங்கத்தவர் பெயர் மற்றும் செல்லுபடியான அடையாள அட்டை இலக்கம் இல்லாது பேணிச் செல்லப்படும் 7,566 கணக்குகள் தொடர்பாக ரூபா 41.22 மில்லியன் தொகை 2023 திசெம்பர் 31 திகதிவரை காணப்படுவதுடன், 2015 ஆண்டு வரை இனங்காண முடியாத அந்த அங்கத்தவர் கணக்கை கணனி தொகுதியில் பூட்டுச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக 2024 ஏப்ரல் 29 திகதிய கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது. 2024 மே 04 திகதிவரை அத் தொகைகளை இனங்கண்டு அங்கத்தவர்களிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கத்தவர் பெயர் மற்றும் செல்லுபடியான அடையாள அட்டை இலக்கம் இல்லாது காணப்படும் அங்கத்தவர் கணக்குகள் தற்போது கணனி தொகுதியில் பூட்டுச் செய்யப்பட்டுள்ளதுடன் ஏதேனும் சந்தர்ப்பத்தில் தொழல் தருனரினால் அங்கத்தவர்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அடையளத்தை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தல் அவ்வாறு பூட்டுச் செய்யப்பட்டுள்ள அங்கத்துவ கணக்கு விபரங்களை வழங்கும் அங்கத்தவரின் பூட்டை அகற்றி சரியான அங்கத்தவரின் பெயர், அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்து கணக்கை இற்றைப்படுத் நடவடிக்கை எடுக்கப்படும். | பூட்டுச் செய்யப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முறைமையொன்றை செயற்படுத்த வேண்டும். |